# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 78/2022

பி,சா.1- குறுக்கு விசாரணை - நாள் 14-03-2023.
பெயர்= தேவி பி,சா.-1
பி.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதி தரப்பில் கு.வி.-

(1) சொக்கநாதசுவாமி திருக்கோவிலில் நான் எப்போது செயல் அலுவலகராக பொறுப்பேற்றுக்கொண்டேன் என்றால் 13-08-2019ம் தேதியில் பொறுப்பேற்றேன் என்கிறார் சாட்சி. தாவாச் சொத்தைப் பார்வையிட்டேனா என்றால் இல்லை. தாவாச் சொததின் சர்வே எண், நான்குமால் தெரியாது என்றால் சர்வே எண் மட்டும் தெரியும், நான்குமால் தெரியாது என்கிறார் சாட்சி. எத்தனை லக்க சொத்துக்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் 3 லக்க சொத்துக்களுக்கு என்கிறார் சாட்சி. மேற்படி 3 லக்க சொத்துக்களின் சர்வேஎண்கள் தெரியுமா என்றால் 24/2, 309/17. 263/1 என்கிறார் சாட்சி. மேற்படி 3 லக்க சொத்துக்களையும் வாதிகள்தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்ற்ால் சரிதான். அவர்கள் பெயரில்தான் பட்டாவும் உள்ளது என்றால் யூடிஆரில் மாற்றி உள்ளார்கள் என்கிறார் சாட்சி. யூடிஆர்க்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் வெங்கடசாமி நாயுடு பெயரில் இருந்தது என்கிறார் சாட்சி. மேற்படி வெங்கடசாமி நாயுடு 3ம் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். தாவா சொததின் பாத்தியவிவரங்களை நான் கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரித்தேனா என்றால் ஆமாம் என்கிறார் சாட்சி.

(2) என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கரியமால் அழகர் கோவில் எங்குள்ளது என்றால் பந்தல்குடியில் உள்ளது என்கிறார் சாட்சி. தாவாச் சொத்துக்கள் கரியமால் அழகர் கோவிலுக்கு 3ம் வாதியின் தகப்பனார் வெங்கடசாமி நாயுடு எழுதிவைத்தார் என்றால் சரிதான். எந்த வருடம் எழுதிவைக்கப்படடது என்றால் 1956ம் வருடம். மேற்படி பத்திரத்தின் நகல் வைத்துள்ளோம். எனக்கு முன்பிருந்த செயல் அலுவலர் கோப்பில் வைத்துள்ளார். அந்தபத்திரத்தில் மொத்தம் எத்தனை லக்க சொத்துக்கள் உள்ளன என்றால் 20க்கும் மேற்பட்ட சரவே எண்களில் சொத்துக்கள் உள்ளது. என்னிடம் காடடப்படும் வா.சா.ஆ.-13 ன் பத்திரத்தின் நகல்தான் எங்கள் அலுவலகததில் உள்ள பத்திரமா என்றால் இல்லை. வா.சா.ஆ.-13 பத்திரத்தில் தாவாச் சொத்து உள்ளதா என்றால் அந்தப் பத்திரத்தை நான் படித்துப்பார்க்கவில்லை என்கிறார் சாட்சி. நான் சொல்லியுள்ள 3 சர்வேஎண்களுக்கான பைமாஸ் நம்பர் சொல்லமுடியுமா என்று கேட்டால் வருவாய்துறை ஆவணங்களைப் பார்த்தால்தான் என்னால்

சொல்லமுடியும் என்கிறார் சாட்சி. வா.சா.ஆ.-16 ஜெராக்ஸ் நகல்தான் எங்கள் கைவசம் உள்ளது. வா.சா.ஆ-16ல் எந்தெந்த சொத்துக்கள் தாவாச் சொத்துக்கள் என்று சொல்லமுடியுமா என்றால் சொலலமுடியாது. ஆனால் நாங்கள் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவில் சர்வேஎண்களைக் குறிப்பிட்டுத்தான் மனுக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த பைமாஸ் நம்பருக்கு இந்த சர்வே நம்பர்தான் என்று தெரியாமல் எவ்வாறு சர்வே எண்ணைக் குறிப்பிட்டு மனுக்கொடுத்தீர்கள் என்றால் 2018ம் வருடம் பந்தல்குடி குறுவட்ட சர்வேயர் அளவீடு செய்து அறிக்கை கொடுத்தார் என்றும், அந்த அறிக்கையின் அடிப்படையில் சர்வே எண் குறிப்பிட்டு மனுக் கொடுத்தோம் என்கிறார் சாட்சி.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.